போட்டிக்கான நிதி ஒதுக்கீட்டையும் – பரிசுத் தொகையையும் அதிகப்படுத்துக!

ஒலிம்பிக் சிட்டி அமைக்கும் திட்டத்தின் நிலை என்ன?

சர்க்கஸ் கூட்ட ஆட்சியாளர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!





சென்னை, அக். 30–

திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட 'குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி' திட்டத்தை ரத்து செய்த சர்க்கஸ் கூட்ட ஆட்சியாளர்கள் ஒலிம்பிக் சிட்டி அமைக்கப் போவதாக சொன்னார்கள் அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள பணிகள் என்ன? அந்தத் திட்டத்தின் நிலை என்ன? என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

தமிழ்நாட்டில் விளையாட்டை மாபெரும் மக்கள் இயக்கமாக்கிட வேண்டும் என்று 'முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை' நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மிக பிரம்மாண்டமாக நடத்தி இருந்தோம்.

Untapped Sports Talents-ஐ கண்டறியும் விதமாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளின் மூலமாக, எண்ணற்ற விளையாட்டு வீரர்கள் - வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டனர்.

நம் திராவிட மாடல் ஆட்சியிட்ட அடித்தளத்தில் இந்தாண்டு நடத்தப்பட்டுள்ள இப்போட்டிகளில், வெற்றி பெற்ற வீரர்களுக்கு வாழ்த்துகளையும் - பங்கேற்றோருக்கு என் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Water Sports வீரர்களை உருவாக்கும் வகையில் ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசையில், நம் திராவிட மாடல் ஆட்சியில் ரூ.42.90 கோடி மதிப்பில் Olympic Water Sports Academy அமைப்பதற்காக கடந்தாண்டு ஜனவரி மாதமும், சேலத்தில் ரூ.20 கோடி மதிப்பில் Multilevel Sports Complex அமைப்பதற்காக 2024-லும் நம் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் அடிக்கல் நாட்டினோம்.

அந்த இரண்டு திட்டங்களுக்குமான பெரும்பாலான பணிகள் நம் திராவிட மாடல் ஆட்சிக்காலத்திலேயே நிறைவுற்ற நிலையில், அந்த விளையாட்டுக் கட்டமைப்புகளை இன்றைய முதலமைச்சர் திறந்து வைத்திருக்கிறார்.

நம் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு கொண்டு வந்த இந்தத் திட்டங்களை திறந்து வைத்து Sticker ஒட்டிக்கொள்வதோடு நிற்காமல், பல ஆயிரம் விளையாட்டு வீரர் - வீராங்கனையர் உருவாக்கிடும் வகையில் இம்மையங்களை இந்த Dummy அரசு பராமரித்திட வேண்டும்.

குறிப்பாக, சேலம் Multi-level sports Complex-ல் ரூ.11.40 கோடி மதிப்பில் புதிய Synthetic Athletic Track அமைக்கவும் கடந்த டிசம்பர் மாதம் நம் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் அடிக்கல் நாட்டப்பட்டது.

இப்படி நம் திராவிட மாடல் ஆட்சியில் விளையாட்டுக்கென்று நாம் கொண்டு வந்த உள்கட்டமைப்புத்திட்டப்பணிகளை இந்த ஆட்சியாளர்கள் முறையாக செய்து முடித்தாலே, அடுத்து வரும் ஆண்டுகள் முழுவதும் அவற்றை திறந்து வைத்துக் கொண்டிருக்கலாம்.

நம் திராவிட மாடல் ஆட்சியில் அறிவிக்கப்பட்ட Global Sports City திட்டத்தை ரத்து செய்த இந்த ஆட்சியாளர்கள், Olympic City அமைக்கப் போவதாக சொன்னார்கள். அதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள பணிகள் என்ன? அந்தத் திட்டத்தின் நிலை என்ன?

வரலாற்றில் இல்லாத வகையில் கடந்த பிப்ரவரி மாதம், 3% Sports Quota-வின் கீழ், நம் திராவிட மாடல் அரசு சார்பில் நம் தலைவர் அவர்கள் ஒரே நாளில் 178 வீரர் - வீராங்கனையருக்கு அரசு வேலைவாய்ப்பை வழங்கினார்கள். 3% இட ஒதுக்கீட்டின் கீழ் மொத்தமாக 300 வீரர்களுக்கு அரசுப்பணிகள் வழங்கிய அரசு, நம் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு. எனவே, இப்பணியில் சுணக்கம் காட்டாமல் இந்த அரசு தொடர்ந்திட வேண்டும்.

முக்கியமாக, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கான நிதி ஒதுக்கீட்டை முதல்முறையாக ஏதோ இந்த மூடர் கூட்ட ஆட்சியில் தான் அதிகபட்சமாக ரூ.83 கோடி என ஒதுக்கியது போல் மீண்டும் ஒரு பொய்யை சொல்லி இருக்கிறார்கள். ஆனால், கடந்தாண்டே நம் திராவிட மாடல் ஆட்சியில் நம்முடைய தலைவர் அவர்கள், ரூ.83.37 கோடி ரூபாயை CM Trophy Games-க்காக ஒதுக்கி இருந்தார்கள்.

எனவே, இந்த Circus கூட்ட ஆட்சியாளர்கள், பொய்பேசி பெருமைத் தேடுவதை தவிர்த்து, வரும் காலங்களில், போட்டிக்கான நிதி ஒதுக்கீட்டையும் - பரிசுத்தொகையையும் அதிகப்படுத்தி நம் வீரர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

தேர்தல் போர்க்களத்தில் டிஜிட்டல் வாளும் கேடயமும்!



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

"**தோ**ழர்களே.. மிக மிக அவசரம்" - யுத்தக்களத்தில் வெளியான முதல் கட்டளை இது. தோழர்கள் ஆயத்தமாகிவிட்டார்கள். அடுத்தடுத்த கட்டளைகள் வருகின்றன.

"அதற்குள் யாரும் உறங்கப் போய் விடாதீர்கள்"

"போன களத்தில் நம்மை எந்த ஆயுதத்தால் வீழ்த்தினார்களோ, அதே ஆயுதத்தால் அவர்களின் சதியை முறியடித்து நாம் வெற்றிபெற்றே ஆக வேண்டும்"

"நம் திட்டத்தை நிறைவேற்றும்வரை சாப்பாடு எதுவும் கிடையாது. அந்த நினைப்பும் வரக்கூடாது."

"இன்னும் ஒரேயொரு பணி பாக்கியிருக்கிறது. அதன்பிறகு இன்றைய நம் அணிவகுப்பிலிருந்து நாம் கலைந்து செல்லலாம்."

-ஒவ்வொரு கட்டளைகள் வரும்போதும் தோழர்கள் உத்வேகம் அடைந்தனர். முன்னிலும் வேகமாகக் களத்தில் நின்றனர். திட்டத்தைக் கச்சிதமாக முடித்துக் காட்டினர். ஆனால், இது இரத்தம் சிந்தும் யுத்தக்களமல்ல. சூழ்ச்சிகளை வெல்லும் ஜனநாயகத் தேர்தல் களம்.

தென் அமெரிக்காவில் உள்ள பிரேசில் நாட்டின் அதிபரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். அதிபருக்குப் போட்டியிடுபவர்களில் யார் 50% வாக்குகளுக்கு மேல் பெறுகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்களாவர். ஒருவேளை, யாரும் அந்தளவு வாக்குகள் பெறாவிட்டால், முதலிரண்டு இடங்களுக்கு வந்தவர்களுக்கு மட்டும் மீண்டும் தேர்தல் நடக்கும். அதில் 50% வாக்குகளைக் கடந்து வெற்றி பெற வேண்டும்.

2026 அக்டோபர் 4 அன்று பிரேசிலில் அதிபர் தேர்தல் நடைபெற்றது. முதன்மைப் போட்டி என்பது லிபரல் பார்ட்டியின் ஃப்ளாவியோ பொல்சனோராவுக்கும், இடதுசாரித் தலைவரும் பிரேசிலின் வலிமைமிக்க அதிபராக 3 முறை இருந்தவரும் உழைப்பாளர் கட்சியின் தலைவருமான லூயிஸ் இனாசியா லுலா டி சில்வாவுக்கும்தான். லுலா என்றால் அவரை உலகம் அறியும். இவர்கள் இரண்டு பேர் தவிர மேலும் சிலர் போட்டியிட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் வலதுசாரி சிந்தனை கொண்டவர்கள்.

ஃப்ளாவியோவை அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளிப்படையாக ஆதரித்தார். டிரம்ப் பின் பிரதிநிதியாகவே பிரேசிலில் ஃப்ளாவியோ களத்தில் இறங்கினார். இவரது அப்பா சீனியர் ப்ளோசனாரோ ஏற்கனவே அதிபராக இருந்து குற்ற வழக்குகளை எதிர்கொண்டு வருபவர். அமெரிக்காவின் பலமான ஆதரவுடன் களமிறங்கிய ஃப்ளாவியோ முதல் சுற்றுத் தேர்தலில் 47.03% வாக்குகள் பெற்றார். லுலா பெற்றவை 45.16% வாக்குகள் மட்டுமே. அமெரிக்காவின் விருப்பப்படி, ஃப்ளாவியோ அதிக வாக்குகள் பெற்றாலும், அதிபராவதற்கான 50%க்கு மேலான வாக்குகளைப் பெறவில்லை. அதனால், முதலிரண்டு இடங்களைப் பிடித்த ஃப்ளாவியோவுக்கும் லுலாவுக்கும் அடுத்த சுற்றுக்கானத் தேர்தல் அக்டோபர் 25 அன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. களத்தில் போட்டியிட்ட மற்ற வேட்பாளர்கள் போட்டியிடும் தகுதியை இழந்து வெளியேறினர்.

உழைப்பாளர் கட்சியின் தலைவரான லுலா தனது கட்சியின் முதல் சுற்றுத் தேர்தல் பரப்புரையில் இருந்த பலவீனத்தை அறிந்துகொண்டார். அதனை சரிப்படுத்தினால் தான் மீண்டெழ முடியும் என்பதில் தெளிவாக இருந்தார். பிரேசிலின் பொருளாதார உறுதித்தன்மை, ஏழைகளுக்கு அரசின் சார்பில் சீரான பண உதவி, கடன் நிவாரண அறிவிப்புகள், தொழில்முனைவோருக்கான வாக்குறுதிகள் என உழைப்பாளர்கள் மற்றும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளுக்குரிய வகையில் தன் வியூகத்தை வகுத்தார். அத்துடன், தன்னை எதிர்ப்பவர்கள் எந்த ஆயுதத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை உணர்ந்து, அதை எதிர்கொள்ளும் வகையில் உருவானது லுலாப் படை.

இந்த லுலாப் படை என்பது முழுக்க முழுக்க டிஜிட்டல் தளத்தை அடிப்படையாகக் கொண்டது. லுலாப் படை என்ற வாட்ஸ்ஆப் சேனல் உருவாக்கப்பட்டது. அதனை உருவாக்கி நிர்வகிக்கும் பொறுப்பை உழைப்பாளர் கட்சியின் பிரதிநிதியான ஆன்ட்ரே ஜோனோனஸ் ஏற்றிருந்தார். ஃப்ளாவியாவின் லிபரல் பார்ட்டியும் மற்ற வலது சாரி கட்சிகளும் வாட்ஸ்ஆப் மற்றும் டெலிகிராம் ஆகிய டிஜிட்டல் தளங்களில் வலிமையாக இருந்து பிரச்சாரம் செய்தன. ஃபேஸ்புக்-இன்ஸ்டாகிராம்-வாட்ஸ்ஆப் உள்ளிட்ட வற்றை நிர்வகிக்கும் மெட்டா நிறுவனம் பிரேசில் தேர்தலில் முதல் சுற்றில் எந்தவுக்கு ஒருதலைப்பட்சமாக நடந்திருக்கிறது என்பதை லுலாப் படை கண்டறிந்தது.

செயற்கை நுண்ணறிவு எனப்படும் ஏ.ஐ. மூலமாக, அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஃப்ளாவியோவும் மற்ற வலதுசாரி வேட்பாளர்களும் பல போஸ்டர்களை உருவாக்கி, சமூக வலைதளங்களில் பரப்பினர். வீடியோக்களைப் பகிர்ந்தனர். ஆனால், லுலாவின் படத்தை உருவாக்க மெட்டா நிறுவனத்தின் ஏ.ஐ. தொழில்நுட்பம் மறுத்தது. பல முறை கோரிக்கை வைத்தும் நிராகரித்தது. ப்ளாவியா கட்சியினர் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் வலைப்பக்கங்களில் பதிவிட்டதை மெட்டா பலரிடமும் கொண்டு சேர்த்தது. அவர்களுக்கான விளம்பர ஏஜென்ட்டாகவே செயல்பட்டது.

அதே நேரத்தில், லுலா கட்சியினர் பதிவிடுவதை மற்றவர்கள் கண்களில் காட்டாதபடி மறைத்தது. பார்வையாளர் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியது. பெரியளவில் யாரிடமும் போய்ச் சேராதபடி தனது அல்காரிதம் எனும் நிரலை அமைத்தது. அத்துடன், லுலா கட்சியினரின் பதிவுகளுக்கு நிறைய கட்டுப்பாடுகளை விதித்தது.

உலகம் முழுவதும், சமூக வலைத்தளப் பரப்புரை முன்னிலை பெற்றுவரும் சூழலில், தங்கள் பிரச்சாரத்தைத் திட்டமிட்டு முடக்குகின்ற மெட்டா நிறுவனத்திற்கு எதிராக பிரேசிலில் தேர்தல் நீதிமன்றத்தில் லுலா வழக்குத் தொடர்ந்தார். மெட்டா நிறுவனத்தின் சார்பில் வைத்த வாதத்தில், "லுலா கட்சியினரின் தொழில்நுட்பரீதியான குறைபாடுகள்தான் அவர்களின் பரப்புரை சரியாகப் போய்ச் சேராததற்கு காரணம்" என்று தெரிவிக்கப்பட்டது. தரவுகளை அலசி ஆராய்ந்த நீதிபதி, மெட்டாவின் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டையும், பிரேசிலில் அது ஒரு தலைப்பட்சமாக செயல்படுவதையும் கண்டறிந்தார். கடைசியில், மெட்டா தனது தவறுகளை ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. அல்காரிதம் உள்ளிட்ட நிரல்களில் பாரபட்சம் இருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி, களத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை சமமாக நடத்தவேண்டும் என உத்தரவிட்டதுடன், உத்தரவைக் கடைப்பிடிக்காவிட்டால், மெட்டா நிறுவனம் நாளொன்றுக்கு 98ஆயிரம் அமெரிக்க டாலர் கட்ட வேண்டும் என அதிரடியாக அறிவித்தார்.

டிஜிட்டல் களத்தின் பாரபட்சமான அணுகுமுறைகளை அம்பலப்படுத்தி, அதற்கான நீதியைப் பெற்றார் லுலா. இதுதான் அவர் கட்சிக்கான டிஜிட்டல் கேடயம். இதனைத் தொடர்ந்து லுலாப் படை தனது டிஜிட்டல் ஆயுதங்களைக் கூர்த் தீட்டத் தொடங்கியது. வாட்ஸ்ஆப் சேனலில் இளம் வாக்காளர்களை சேர்க்கும் செயல்பாட்டைத் திட்டமிட்டு வகுத்தார் ஜோனோனஸ். இரண்டு வார கால இடைவெளிக்குள் 11 மில்லியன் (1கோடியே 10இலட்சம்) பேர் லுலாப் படையில் இணைந்தனர். அவர்களை ஒருங்கிணைத்த ஜோனோனஸ், இரவும் பகலும் கட்டளைகளை வழங்கியபடியே இருந்தார்.

லுலாவுக்கான ஏ.ஐ.இமேஜ்கள் உருவாக்கப்பட்டன. உழைப்பாளர் கட்சியின் முழக்கங்கள் அதில் இடம்பெற்றன. குறுங்காணொலிகள் வடிவமைக்கப்பட்டு அவை அனைவராலும் பகிரப்பட்டன. ஒவ்வொரு கட்டளையும் லுலாப் படையின் தோழர்களால் கடைக்கோடி வாக்காளர்கள் வரை கொண்டு சேர்க்கப்பட்டன. குறிப்பாக பெண்கள், இளைஞர்கள், உழைப்பாளர்களிடம் இந்த வாட்ஸ்ஆப் சேனல் பரப்புரை சரியான முறையில் போய்ச் சேர்ந்தது.

அதிபர் தேர்தலுக்கான இரண்டாம் சுற்றில் கடும் போட்டி நிலவும் எனப் பல கணிப்புகள் தெரிவித்தன. கடும்போட்டியில் ஃப்ளாவியா முன்னேறிவிடுவார் என்றும் அந்தக் கணிப்புகள் தெரிவித்தன. அதைப் பற்றிக் கவலைப்படாமல், லுலாப் படை வாக்குப்பதிவு நாளன்று நேரலையாக செய்திகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தது. உழைப்பாளர் கட்சியினரிடம் மட்டுமின்றி, பொதுமக்களிடமும் அது நம்பிக்கையை உருவாக்கியது.

வாக்குகள் எண்ணிக்கையின் முடிவில் லுலா 51.7% வாக்குகள் பெற்று பிரேசிலின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமெரிக்காவும் மெட்டா உள்ளிட்ட நிறுவனங்களும் வரிந்து கட்டி ஆதரித்த ஃப்ளாவியோ 48.2% வாக்குகளை மட்டுமே பெற்றார். பிரேசில் தேர்தல் வரலாற்றில், 1989க்குப் பிறகு, முதல் சுற்றில் பின்தங்கிய யாரும் இரண்டாம் சுற்றில் முன்னேறி வந்து அதிபராக வில்லை என்பதை உடைத்தெறிந்து லுலாப் படை இந்த வெற்றியை சாத்தியமாக்கியுள்ளது. குறிப்பாக, பிரேசிலின் வடகிழக்குப் பகுதியில் 3 மில்லியன் வாக்குகள் லுலாவுக்குப் பதிவாகின. நகரங்களை ஒட்டியுள்ள உழைப்பாளர் வாழும் பகுதிகளில் அதிகளவில் ஆதரவு கிடைத்துள்ளது.

பிரேசிலின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லுலா டி சில்வா, "இந்தத் தேர்தல் களத்தில் பொய்களும் புறக்கணிப்பும் தோல்வியடைந்துள்ளன. பிரேசில் இனி எந்தப் பெரிய நாட்டுக்கும் கொல்லைப்புற வாசலாக இருக்காது" எனத் தெரிவித்ததுடன், "இந்த வெற்றிக்கு காரணமான தளபதி இவர்தான்" என்று லுலாப் படையை வழிநடத்திய ஆன்ட்ரே ஜோனோனஸைப் பாராட்டினார். இளைஞர்களும், பெண்களும், உழைப்பாளர்களும் வெற்றிக் கொண்டாட்டத்தில் திளைத்தனர்.

சமூக வலைத்தளங்கள் எனும் டிஜிட்டல் யுகத்தில், அதிகார மையங்கள் எல்லாவற்றையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டு, தங்களுக்கு அடிமையாக இருக்க விரும்புகிறவர்களுக்கு மட்டுமே ஆதரவு கிடைக்கச் செய்கின்றன. பிரேசிலில் இடதுசாரிகள் வலிமைப் பெற்றுவிடக்கூடாது என்று அமெரிக்கா தனது ஆதிக்கத்தினால், வலதுசாரிகளுக்கு ஆதரவாக சமூக வலைத்தள நிறுவனங்களைக் கையாண்டது போல, இந்தியாவில் பா.ஜ.க தனக்கான அடிமைகளுக்கு ஆதரவாக அதை செயல்படுத்துகிறது. தமிழ்நாட்டில் சமூக நீதி-மொழியுணர்வு-மதநல்லிணக்கம்-மாநில வளர்ச்சி ஆகியவை மேலெழக்கூடாது என்பதற்காக தனது புதிய சேவகன் த.வெ..க.வுக்கு ஆதரவாக சமூகவலைத்தள நிறுவனங்களை இயக்குகிறது. தி.மு.க. தரப்பில் பதிவிடப்படும் கருத்துகள் முடக்கப்படுகின்றன. மக்களின் பார்வையிலிருந்து மறைக்கப்படுகின்றன.

லுலா பிரேசில் நீதிமன்றத்தை நாடியது போல, தி.மு.க.வும் சளைக்காமல் சட்டப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் துணைப்பொதுச் செயலாளர்-நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. இது குறித்து சமூக வலைத்தள நிறுவனங்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். தி.மு.க தகவல்தொழில்நுட்ப அணியும் கழக சட்டத்துறையும் ஒருங்கிணைந்து, நீதிமன்றங்கள் மூலமாக சமூக வலைத்தள மோசடிகளை அம்பலப்படுத்தி, நியாயத்தைக் கோரி வருகின்றன. அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகளும் வேகமெடுத்துள்ளன.

பிரேசிலில் முதல் கட்டத்தை இழந்தாலும், "போன களத்தில் நம்மை எந்த ஆயுதத்தால் வீழ்த்தினார்களோ, அதே ஆயுதத்தால் அவர்களின் சதியை முறியடித்து நாம் வெற்றிபெற்றே ஆக வேண்டும்" என மீண்டெழுந்த லுலாப் படையினர் போல, தி.மு.க.வின் படையும் அடுத்த களத்தில் அதே டிஜிட்டல் வாளுடனும் கேடயத்துடனும் தனது வெற்றியை நிலைநாட்டும்.